NIC

# அசைபோடும் சிறிய கால்நடைகளின் வளர்ச்சிக்கான (செம்மறி ஆடு, மற்றும் வெள்ளாடு) மத்திய அரசின் ஆதரவுடன் கூடிய ஒருங்கிணைந்த திட்டம்

அசைபோடும் சிறிய கால்நடைகளான செம்மறிஆடு, வெள்ளாடு மற்றும் முயல்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான புதிய திட்டத்தை இந்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. நடப்பு 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007-08 முதல் 2011-12) இனியுள்ள ஆண்டுகளில் இத்திட்டத்திற்கான நிதி உதவிகள் வழங்கப்படும். தமிழ்நாட்டில், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், சிவகங்கை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, விருதுநகர், வேலூர், இராமநாதபுரம், திருவண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர், கரூர், விழுப்புரம் மாவட்டங்களில் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் 6 ஒன்றியங்களில் மட்டும் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் செம்மறிஆடு / வெள்ளாடு வளர்ப்பு மந்தைகள் மற்றும் இனப்பெருக்க வளர்ச்சிப்பண்ணைகளுக்கு மானியத்தோடு கூடிய கடன் வசதிகள், திட்டத்தின் மொத்த செலவினத்தை பொறுத்து வழங்கப்படும்.

தேர்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள் முறையே /

ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், சிவகங்கை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, விருதுநகர், வேலூர், இராமநாதபுரம், திருவண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர், கரூர், விழுப்புரம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் மூலனூர், குண்டடம், ஊத்துக்குளி, வெள்ளக்கோயில், காங்கேயம், தாராபுரம் முதலிய ஒன்றியங்கள் உட்பட

## கடனுதவி பெறுவதற்கு தகுதியானவர்கள்

- தனிநபர் விவசாயிகள் மற்றும் சுயஉதவிக்குழுக்களுக்கு கால்நடை வளர்ப்பு மந்தைகள் அமைக்க கடனுதவி வழங்கப்படும். பரம்பரை மேய்ப்பர்கள், பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் மலைஜாதியினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தனிநபர் விவசாயிகள், அரசுசாரா நிறுவனங்கள், மற்றும் கம்பெனிகளுக்கு கால்நடை இனப்பெருக்க பண்ணைகள் அமைக்க கடனுதவி வழங்கப்படும். விவசாயிகளை குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கு கால்நடை வளர்ப்புப்பண்ணைகள் அமைத்து கொடுக்க உதவுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

திட்ட செலவினங்கள் மற்றும் உச்சவரம்பு

| வ. எண் | திட்டப்பணி | மொத்த செலவினங்கள் (லட்சத்தில்) | மூலதன மானிய உச்சவரம்பு | | கடனுதவி (விழுக்காடு) |
|---|---|---|---|---|---|
| | | | தொழில் முனைவோர் (பொது பிரிவு) | தொழில் முனைவோர் (ஆதிதிராவிடர் மற்றும் மலைஜாதியினர், வடகிழக்கு மாநில மக்கள் | |
| 1 | செம்மறிஆடு / வெள்ளாடு வளர்ப்பு மந்தைகள் (40+2) | 1.00 | மொத்த செலவினத்தில் 25% (அதிகபட்சம் ஃ 25,000/-) | மொத்த செலவினத்தில் 33.33% (அதிகபட்சம் ஃ 33,300/-) | மார்ஜின் (குறைந்தபட்சம்) 10%, வங்கிக்கடன் (மானியம் உட்பட) அதிகபட்சம் 90% |
| 2 | செம்மறிஆடு / வெள்ளாடு இனப்பெருக்க பண்ணைகள் (500+25) | 25.00 | மொத்த செலவினத்தில் 25% (அதிகபட்சம் ஃ 6,25,000/-) | மொத்த செலவினத்தில் 33.33% (அதிகபட்சம் ஃ 8,33,300/-) | மார்ஜின் (குறைந்தபட்சம்) 25%, வங்கிக்கடன் (மானியம் உட்பட) அதிகபட்சம் 75% |

வங்கிகள் உயர்செலவின திட்டங்களுக்கு கூட கடனுதவி அளிக்கலாம், இருப்பினும் மானியஉதவி மேற்கண்ட மொத்த திட்டச்செலவின அளவுக்கு மட்டுமே வழங்கப்படும்.

## கடனுதவி வழங்க தகுதியுள்ள நிதி நிறுவனங்கள்

வணிக வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள், மாநில விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் (நிலவள வங்கிகள்) மற்றும் நபார்டு வங்கியின் மறுநிதி / கூட்டுநிதி உதவிகளை பெறத்தகுதியான அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் மேற்கண்ட கடனுதவிகளை பெறலாம்.

## திட்ட செயல்பாடுகள்

ஒவ்வொரு மாநிலத்திலும், நபார்டு வங்கி, மாநில அளவிலான திட்ட அனுமதி மற்றும் திட்டக்கண்காணிப்பு குழு ஒன்றை அமைத்து அதன் மூலம் திட்ட செயல்பாடுகளுக்கான அனுமதி வழங்குதல், கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் முதலிய பணிகளை மேற்கொண்டுள்ளது.

## கால்நடை வளர்ப்பு சந்தைகளுக்கான செயல்பாடுகள்

- அரசுசாரா நிறுவனங்கள் (என்.ஜி.ஓ) விருப்பமுள்ள விவசாயிகளை ஒன்றுதிரட்டி அவர்களை குழுக்களாக பதிவு செய்து, திட்டத்தின் செயல்பாட்டை புரியவைத்து, மாவட்ட கால்நடை வளர்ப்பு துறையின் உதவியுடன் தேவைப்படும் பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளித்து, உள்ளூர் வங்கிகள் மூலம் கடனுதவிகளை பெற்றுத்தந்து, கால்நடைகளை வாங்கவும், விற்கவும் தேவைப்படும் வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கவேண்டும். விவசாயிகளை குழுக்களாக ஒன்றுபடுத்தவும், பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு பணிகளுக்கும், தனி உதவித்தொகை உண்டு. குழுவின் பயிற்சிக் காலம் முடிவடைந்ததும் அக்குழுவின் என்.ஜி.ஒ, உள்ளூர் வங்கிகளில் கடனுதவி பெற்றுத்தர ஆவன செய்யவேண்டும். வங்கிகள் திட்டமனுக்களை சட்டநிர்ணயப்படி பரிசீலித்து கடனுதவிகளை விவசாயிகளுக்கு வழங்கி பின் வங்கிகள் தங்களது மாவட்ட கட்டுப்பாட்டு அலுவலகங்கள் மூலம் குறிப்பிட்ட படிவத்தில் மனுக்களை நபார்டு வங்கியின் மண்டல அலுவலகத்துக்கு அனுப்பி மானியத்தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

## கால்நடை இனப்பெருக்க பண்ணைகளுக்கான செயல்பாடுகள்

- தொழில் முனைவோர் அல்லது என்.ஜி.ஓ. நிறுவனங்கள் அனைத்து விவரங்களுடன் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையை வங்கிகளுக்கு சமர்ப்பித்து கடனுதவிகள் கேட்டு விண்ணப்பிக்கலாம். வங்கிகள் அந்த திட்ட அறிக்கைகளை சட்டநிர்ணயங்கள்படி பரிசீலித்து, அனைத்து சாத்தியக்கூறுகளும் சாதகமாக இருக்கும் பட்சத்தில் கடனுதவியளிக்கும். வங்கிகள் தங்களது மாவட்ட கட்டுப்பாட்டு அலுவலகங்கள் மூலம் குறிப்பிட்ட படிவத்தில் மனுக்களை நபார்டு வங்கியின் மண்டல அலுவலகத்துக்கு அனுப்பி மானியத்தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

## மானியத்தொகையை பயனாளிகள் கணக்கில் சரிசெய்யும் முறை

- நபார்டு வங்கி வழங்கும் மானியத்தொகையை வங்கிகள் "மானிய ஒதுக்கீடு நிதியக்கணக்கு" என்ற பெயரில் வரவு வைக்கவேண்டும். ஒவ்வொரு பயனாளியும் தங்களது மூலதன கடன் தொகை முழுவதும் திருப்பி செலுத்திய பின் பயனாளிக்கான மானியத்தொகையை வங்கிகள் ஒவ்வொரு பயனாளியின் கணக்கில் வரவு வைத்து சரிக்கட்ட வேண்டும் (ஙயஉம நனேநன ளரளெனைல), ஆகவே வங்கிகள் கடனுதவி வழங்கும்பொழுது, வங்கிக்கடனுடன் மானியத்தொகையையும் சேர்த்து கடனாக வழங்கவேண்டும். மேலும் வங்கிகள் ஒவ்வொரு பயனாளிக்கும் கடனை திருப்பி செலுத்தும் பட்டியல் தயாரித்து அதில் வங்கி கடன் முதலில் செலுத்தும்படியும் பின் கடைசியில் மானியத்தொகை சரிக்கட்டுவதாகவும் இருத்தல் வேண்டும். மானியத்தொகைக்கு வட்டி வசூல் செய்யக்கூடாது.

## கடனை திருப்பிச்செலுத்தும் காலக்கெடு

- பொதுவாக கடனை திருப்பிச்செலுத்தும் காலக்கெடு ரொக்க வருமானத்தை பொறுத்து அமையும் இருப்பினும் அதிகபட்ச காலக்கெடுவாக 9 ஆண்டுகளில் திருப்பிச்செலுத்த வேண்டும் அதில் சலுகை காலக்கெடு 2 ஆண்டுகள் அடங்கும்.

## வட்டி விகிதம் மற்றும் உத்திரவாதம்

- காலக்கடன்களுக்கான வட்டிவிகிதம் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்கள் மற்றும் கடன் வழங்கும் வங்கியின் கொள்கைகளின் அடிப்படையில் அமையும். மேற்கண்ட கடனுதவியை பெற தேவைப்படும் உத்திரவாதம் இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்பொழுது வழங்கும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் கோரப்படும்.

**மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்தில் அணுகவும்**

| | |
|---|---|
| தேசிய விவசாயம் மற்றும்<br>கிராமப்புற வளர்ச்சி வங்கி<br>தமிழ்நாடு மண்டல அலுவலகம்,<br>48, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம்,<br>சென்னை 600 034<br>தொலைபேசி 044 - 2827 6088<br>தொலை அஞ்சல் 044 - 28275732<br>நுஅயடை ஈஊாநயேபே"யேயெசன,டிசப?<br><br><br><br><br>துணை இயக்குனர்,<br>கால்நடை வளர்ப்புத்துறை, | மாவட்ட வளர்ச்சி மேலாளர்,<br>நபார்டு வங்கி,<br>ஈரோடு மற்றும் திருப்பூர் (9443380614)<br>கரூர் (9443316477)<br>கிருஷ்ணகிரி (9443316480)<br>நாகப்பட்டினம் (9443380617)<br>பெரம்பலூர் மற்றும் அரியலூர் (9443316479)<br>இராமநாதபுரம் (9443380620)<br>சிவகங்கை, (9443380622)<br>திருநெல்வேலி (9443380625)<br>திருச்சிராப்பள்ளி (9443380624)<br>திருவண்ணாமலை (9443380626)<br>விருதுநகர் (9443380630)<br>வேலூர் (9443380628)<br>விழுப்புரம் (9443380629) மாவட்டங்கள். |

## AH Schemes of Governement of India

### 1. Dairy Entrepreneurship Development Scheme

a. Establishment of Small Dairy Units - TFO - Upto Rs.5 lakh - 2 to 10 animals
b. Rearing of Heifer Calves - TFO - Rs.4.80 lakh - 5 to 20 calves
c. Vermicompost - TFO - Rs.0.20 lakh - to be considered with milch animal units, not separately
d. Purchase of Milking machines - TFO - Rs.18 lakh - Upto 2,000 lit. capacity
e. Purchase of dairy processing equipment - TFO - Rs.12 lakh
f. Establishment of dairy product transportation facilities and cold chain - TFO - Rs.24 lakh
g. Cold Storage Facilities - TFO - Rs.30 lakh
h. Establishment of Private Veterinary Clinics - TFO - Rs2.40 lakh (mobile Clinics) Rs. 1.80 lakh (Stationary Clinics)
i. Dairy Marketing Outlets - TFO - Rs.0.56 lakh.

**Other Features**

- Capital Subsidy (back ended) - 25 % ( 33.33 % for SC/ST) - lock in period - 3 years
- Margin - 10 %
- Repayment period - 3 to 7 years
- Grace period 3 to 6 months
- Banks to apply for subsidy after disbursement of first instalment

### 2. Establishment of Mother Units for Rural Backyard Poultry

**Scheme Objectives**

- To establish mother units (MUs) -MUs to rear day old chicks of low input birds upto 4 weeks
- MUs to supply to the beneficiaries under Rural Backyard Poultry programme
- MUs to get the day old chicks from State Poultry Farms or private hatcheries.

**Other Features**

- Dept of AH shall take steps for Rural Backyard Poultry Units
- Dept of AH shall take steps for the supply of day old chicks to MUs from State Poultry Farms or private hatcheries.
- Maximum MUs in a district – 10 units
- Dept of AH will identify beneficiaries and sponsor applications for MUs.

**Scheme Details**

- TFO - Rs.1.36 lakh
- Rs.0.36 lakh - Interest Free Loan
- Rs.0.20 lakh - Subsidy
- Rs.0.80 lakh – Bank Loan
- Unit size – 1,500 chicks per batch

## 3. Establishment of Piggery Units

### Scheme Details

i. Pig Breeding Farms (20+4)– TFO Rs.6 lakh – Subsidy 25 % – Margin 10 %
ii. Pig Rearing Units (3+1) – TFO Rs.0.76 lakh - Subsidy 25 % – Margin 10 %
iii. Retail Outlets with chilling – TFO Rs. 10 lakh - Subsidy 25 % – Margin 10%
iv. Live Markets – TFO Rs. 5 lakh ( 2 per dist.) - Subsidy 50 % – Margin 10%

## 4. Rearing of Male Buffalo calves

i. Rearing of male calves - mini units (1-9 calves) - @ Rs.6,400/- per calf - short term loan-100% interest subsidy (back ended) - no margin money.
ii. Rearing of male calves - commercial units (10-50 calves) - @ Rs.87,500/- per 10 calves-25% capital subsidy - margin 10%
iii. Rearing of male calves - industrial units (1000 calves p.a.) - Rs.83.45 lakh per 1000 calves - 25% captial subsidy - margin 10%

## 5. Utilisation of Fallen Animals

i. Establishment of carcass utilisation centre - 5 to 6 carcasses per day - TFO Rs.1.45 crore - 90% captial subsidy - 10 % margin.
ii. Establishment of carcass utilisation centre - 20 to 25 carcasses per day - TFO Rs.2.80 crore - 90% captial subsidy - 10 % margin.
iii. Bone crushing unit - TFO Rs.15 lakh - 50% captial subsidy - 10 % margin.
iv. Renovation of existing carcass utilisation centre - TFO Rs.1.60 crore - 90% captial subsidy - 10 % margin.

*************